**<u>சுருf«</u>**

**சுய உதவிக் குழுக்கள் – 2010–2011 ஆம் ஆண்டிற்கு சுய உதவிக் குழுக்கள் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கு இடையே வட்டாரம் மற்றும் மாவட்ட அளவில் கலாச்சாரப் போட்டிகள் நடத்துதல் – தொகை ஒப்பளிப்பு மற்றும் விடுவிப்பு செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.**

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி3) துறை

அரசாணை (நிலை) எண்.51

நாள்: **20.05.2010**
திருவள்ளுவர் ஆண்டு 2041
வைகாசி – 6
படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண். 66, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி–3) துறை, நாள் 16.07.2009.
2. மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் நேர்முக கடித எண். 194/எப்/2010, நாள் 05.5.2010.

**********

<u>ஆணை</u>:-

படிக்கப்பட்டவை 1–ல் உள்ள அரசாணையில் 2009–2010 ஆம் ஆண்டிற்கான மகளிர் சுய உதவிக் குழுக்கள் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கிடையே கலாச்சாரப் போட்டிகள் நடத்துவதற்கு அனுமதி அளித்து ஆணை வெளியிடப்பட்டது.

2. படிக்கப்பட்டவை 2–ல் உள்ள கடிதத்தில் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர், மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கு இடையே ஒற்றுமையை பலப்படுத்தவும், குழுக்களுக்கிடையே ஆரோக்கியமான போட்டியை உருவாக்க வேண்டியும், வட்டார மற்றும் மாவட்ட அளவில் கலாச்சாரப் போட்டிகள் 2006 – 2007 ஆம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வருவதாகவும், இவ்வகையான போட்டிகள் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களிடம் நல்ல வரவேற்பையும், ஒற்றுமையையும், அவர்களிடையே அதிக ஆர்வத்தையும் ஏற்படுத்தியதால் 2010–2011ஆம் ஆண்டிலும் மகளிர் சுய உதவிக் குழுக்களிடையே தொடர்ந்து இப்போட்டிகளை நடத்துவதற்குரிய கருத்துருவினை கீழ்க்கண்டவாறு அரசிற்கு சமர்ப்பித்துள்ளார்:-

- முதற்கட்டமாக வட்டார அளவிலான போட்டிகளில் ஒவ்வொரு ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளிலிருந்தும் ஒரு குழு பங்கேற்கும். அதில் வெற்றி பெற்ற குழு மாவட்ட அளவிலான போட்டிகளில் கலந்து கொள்ளும்.

- வட்டார அளவிலான போட்டிகள் 2010 நவம்பர் மற்றும் டிசம்பர் திங்களில் நடைபெறும். மாவட்ட அளவிலான போட்டிகள் ஜனவரித் திங்களில் பொங்கலை ஒட்டி நடைபெறும்.
- பட்டிமன்றம், பேச்சுப் போட்டி, பாட்டுப் போட்டி, குழுப் பாட்டு, குழு நடனம் மற்றும் கோலப் போட்டி ஆகியவற்றில் ஏதேனும் நான்கினை தேர்ந்தெடுத்து பங்கு கொள்ளலாம். சமுதாய விழிப்புணர்வை அடிப்படையாகக் கொண்டு இந்த போட்டிகள் நடத்தப்படும்.
- போட்டிகளில் வெற்றி பெறும் குழுக்களுக்கு பரிசுத் தொகையும், சான்றிதழ்களும் வழங்கப்படும். வட்டார அளவிலான போட்டிகளில் வெற்றி பெறும் நபர்களுக்கு ஒரு போட்டிக்கு ரூ. 1,000/– வழங்கப்படும்.
- மாவட்ட அளவில் ஒவ்வொரு போட்டிக்கும் 3 பரிசுகள் கீழ்க்கண்டவாறு வழங்கப்படும்.

  முதல் பரிசு – ரூ. 5,000/–
  இரண்டாவது பரிசு – ரூ. 3,000/–
  மூன்றாவது பரிசு – ரூ. 2,000/–

3. மேலும் அவர், போட்டிகள் நடத்த விருப்பமும், போதிய அடிப்படை வசதிகளும் கொண்ட மகளிர் கல்லூரிகள், பள்ளிகள் மற்றும் தொழில்நுட்பப் பயிலகங்கள், தொழிற்பயிற்சி நிறுவனங்கள் மூலம் இப்போட்டிகள் நடத்தப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

4. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் அவர்கள் இந்தப் போட்டிகள் நடத்த தேவையான செலவினங்கள் கீழ் வருமாறு பட்டியலிட்டுள்ளார் :-

<u>அ) வட்டார அளவிலான போட்டிகள்</u>

| வரிசை எண் | செலவின விபரங்கள் | தொகை (ரூ) |
|---|---|---|
| | ஒரு ஊராட்சியில் பங்கேற்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கை (மதிப்பீடு)= 10 | |
| 1 | உணவு (ஒரு நபருக்கு ரூ. 50/– வீதம்) (ரூ. 50 x 10 நபர் x 12,618 ஊராட்சிகள் | 63,09,000 |
| 2 | போக்குவரத்து செலவு (ஒரு நபருக்கு ரூ. 10/– வீதம்) (ரூ. 10 x 10 நபர் x 12,618 ஊராட்சிகள்) | 12,61,800 |
| 3 | போட்டிகளை நடத்துவதற்கு ஆகும் செலவு – நான்கு பிரிவுகள் (ஒரு பிரிவிற்கு ரூ. 2500/– வீதம்) (ரூ. 2500 x 4 பிரிவுகள் x 385 வட்டாரங்கள்) | 38,50,000 |
| 4 | பரிசுத் தொகை வழங்க ஆகும் செலவு (4 பிரிவுகள் x ரூ. 1000/– வீதம்) (ரூ. 1000 x 4 பிரிவுகள் x 385 வட்டாரங்கள்) | 15,40,000 |
| 5 | பிற செலவினங்கள் மற்றும் ஆவணப்படுத்துதல் (ரூ. 2000 x 385 வட்டாரங்கள்) | 7,70,000 |
| | **உப மொத்தம்** | **1,37,30,800** |

## ஆ) மாவட்ட அளவிலான போட்டிகள்

| | | |
|---|---|---|
| | பங்கேற்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கை மதிப்பீடு (ஒரு வட்டாரத்திற்கு 15 நபர்கள்) | |
| 1 | உணவு (ஒரு நபருக்கு ரூ. 100/– வீதம்)<br>(ரூ. 100 x 15 நபர் x 385 வட்டாரங்கள்) | 5,77,500 |
| 2 | போக்குவரத்து செலவு (ஒரு நபருக்கு ரூ. 20/– வீதம்)<br>(ரூ. 20 x 15 நபர் x 385 வட்டாரங்கள்) | 1,15,500 |
| 3 | போட்டிகளை நடத்துவதற்கு ஆகும் செலவு – நான்கு பிரிவுகள் (ஒரு பிரிவிற்கு ரூ. 6000/– வீதம் X 4) (ரூ. 6000 x 4 பிரிவுகள் x 32 மாவட்டங்கள்) | 7,68,000 |
| 4 | மாவட்ட அளவில் பரிசுத் தொகை வழங்க ஆகும் செலவு<br>(4 பிரிவுகள் x ரூ. 10,000/– வீதம்)<br>(ரூ. 10,000 x 4 பிரிவுகள் x 32 மாவட்டங்கள்) | 12,80,000 |
| 5 | பிற செலவினங்கள் மற்றும் ஆவணப்படுத்துதல்<br>(ரூ. 6000 x 32 மாவட்டங்கள்) | 1,92,000 |
| | **உப மொத்தம்** | **29,33,000** |
| | **மொத்தக் கூடுதல் (அ) + (ஆ)** | **1,66,63,800<br>(அ)<br>1,66,64,000** |

**5.** தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர், 32 மாவட்டங்களுக்கு உட்பட்ட, மாவட்ட மற்றும் வட்டார அளவில் கலாச்சாரப் போட்டிகள் நடத்துவதற்கு ஆகும் மொத்தச் செலவு ரூ.1,66,64,000/– ஆகும் எனவும், இதில் ரூ.1.60 கோடி 2010–2011 வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும், மீதமுள்ள ரூ.6.64 இலட்சம் 2009–2010 ஆம் ஆண்டில் பெறப்பட்ட தொகையின் சேமிப்பிலிருந்து பயன்படுத்தப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

**6.** தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் அவர்கள் (i) மகளிர் சுய உதவிக்குழுக்கள் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கு கலாச்சாரப் போட்டிகள் நடத்துவதற்கு தேவைப்படும் மொத்த தொகையான ரூ.1,66,64,000/–க்கு கோடிகளுக்கு அனுமதி அளித்து ஆணை பிறப்பிக்குமாறும் (ii) 2010-11ஆம் ஆண்டிற்கான வரவு செலவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.1.60 கோடியை விடுவிப்பு செய்து, அத்தொகையை அரசு காலாண்டு முறைகளின்படி ஒதுக்கீடு செய்வதில் இருந்து விலக்களிக்குமாறும் (iii) மீதமுள்ள கூடுதல் தொகையான ரூ. 6,64,000/–த்தை 2009–2010ஆம் ஆண்டு பெறப்பட்ட நிதியின் சேமிப்பிலிருந்து பயன்படுத்திக் கொள்ள அனுமதி வழங்குமாறும் (iv) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆணையர் அவர்கள் இதற்கான தொகையினை பெற்று தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்திற்கு காசோலையாக வழங்குவதற்கு உரிய அதிகாரம்

வழங்குமாறும் (v) அரசு முதன்மைச் செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அவர்கள், மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் அவர்களுடன் கலந்தாலோசித்து வழிகாட்டு நெறிமுறைகளில் அவ்வப்போது நடைமுறையின் தேவைக்கு ஏற்றவாறு மாற்றம் செய்ய உரிய அதிகாரம் வழங்குமாறும்அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

7. மேலே பத்தி 6–ல் குறிப்பிட்டுள்ள தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநரது கருத்துருவினை அரசு மிகவும் கவனமுடன் பரிசீலித்து, அதனை ஏற்றுக் கொள்ளலாமென முடிவு செய்து பின்வருமாறு ஆணையிடுகிறது.

a) மேலே பத்தி 2 முதல் 6 வரை குறிப்பிட்டுள்ளவாறு மகளிர் சுய உதவிக்குழுக்கள் / ஊராட்சி அளவிலான உறுப்பினர்களுக்கிடைய பல்வேறு கலாச்சாரப் போட்டிகள் நடத்துவதற்கு ஏதுவாக 2010–11ஆம் ஆண்டிற்கு ரூ.1,66,64,000/– (ரூபாய் ஒரு கோடியே அறுபத்தி ஆறு லட்சத்து அறுபத்தி நான்காயிரம் மட்டும்) அனுமதித்தும் அத்தொகையில் ரூ.1.60 கோடியை ( ரூபாய் ஒரு கோடியே அறுபது லட்சங்கள் மட்டும்) விடுவித்தும், அரசு காலாண்டு விதிமுறைகளின்படி விடுவிப்பு செய்வதில் இருந்து விலக்களித்தும் ஆணையிடுகிறது.

b) மேலும் மீதமுள்ள தொகை ரூ.6.64 இலட்சங்கள் (ரூபாய் ஆறு இலட்சத்து அறுபத்தி நான்காயிரம் மட்டும்) தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் 2009–2010ஆம் ஆண்டின் சேமிப்பிலிருந்து பயன்படுத்திக் கொள்ள அனுமதித்து ஆணையிடுகிறது.

c) அரசு முதன்மைச் செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அவர்கள், மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் அவர்களுடன் கலந்தாலோசித்து வழிகாட்டு நெறிமுறைகளில் அவ்வப்போது நடைமுறையின் தேவைக்கு ஏற்றவாறு மாற்றம் செய்ய உரிய அதிகாரம் அளித்து ஆணையிடுகிறது.

d) தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர், தனது முந்தைய வருடத்து சேமிப்புத் தொகையை எதிர்வரும் ஆண்டில் அரசுக்கு கருத்துரு அனுப்பும்போது கணக்கில் எடுத்துக் கொள்ளலாம்.

8. மேலே பத்தி 7(a)ல் விடுவிக்கப்பட்ட தொகையினை கீழ்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

''2235 – சமூகப் பாதுகாப்பும், நலனும் – 02 – சமூக நலன் 103 மகளிர் நலன் பதினொன்றாம் ஐந்தாண்டின் திட்டப் பணிகள் **II,** மாநிலத் திட்டம் **LV** – சுய உதவிக் குழுவினரிடையே போட்டிகளுக்கு ஏற்பாடு செய்தல் – 09 உதவித் தொகை – 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை **(DPC 2235 – 02 – 103 – LV – 0939)''**

9. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆணையர் அவர்கள் மேலே பத்தி 7(a)ல் விடுவிக்கப்பட்ட தொகையினைப் பெற்று தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்திற்குக் காசோலையாக வழங்குவதற்கு உரிய அதிகாரம் வழங்கப்படுகிறது.

10. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் அவர்கள் அதற்கான பயன்பாட்டுச் சான்றிதழை நடப்பு நிதியாண்டு இறுதியில் மாநிலக் கணக்காயர் / ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மற்றும் அரசுக்கு சமர்ப்பிக்குமாறும் அரசு ஆணையிடுகிறது.

11. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு. எண்.338/செயலர் (செலவினம்)/2010, நாள் 14.05.2010–ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.அஷோக் வர்தன் ஷெட்டி
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், சென்னை– 32.
ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, சென்னை– 15.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள், ()
அனைத்து திட்ட அலுவலர்கள், ()
(மகளிர் திட்டம்) ()
(மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் மூலமாக)
மாநிலக் கணக்காயர், சென்னை –18.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை – 35.
<u>நகல்:</u>–
மாண்புமிகு துணை முதலமைச்சரின் முதுநிலை நேர்முக
உதவியாளர், சென்னை – 9.
நிதி (ஊரக வளர்ச்சி)த்துறை, சென்னை – 9.
அரசு முதன்மைச் செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்
துறையின் தனிச் செயலர், சென்னை – 9.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (வரவு (ம) செலவு மற்றும் ஒருங்கிணைப்பு)துறை, சென்னை – 9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.